**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No.218/2024 - PW-2**

| | |
|---|---|
| Name | திரு.ஜெகதீசன் |
| Husband/Father Name | வடிவேல் |
| Village /Area | பழைய பாளையம் |
| Taluk | சோளிங்கர் |
| Occupation | கூலி |
| Age | 57 |
| Religion | இந்து |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 26.08.2025.

**(எதிரி காணொலி காட்சி முலம் மத்திய சிறைச்சாலை வேலூரில் இருந்து ஆஜர்படுத்தப்பட்டார் )**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். இறந்த சண்முகம் எனக்கு தூரத்து உறவில் மாமா முறை. 08.05.2024 அன்று சண்முகம் என்பவர் கோவீந்தாங்கள் ஜங்ஷனில் உள்ள டீக்கடைக்கு வந்தார் அப்போது சண்முகத்தை வடிவேல் என்பவர் ரீப்பர் மரக்கட்டையில் தலையிலும், இடது கையிலும் அடித்தார். எதிரி சம்பவ சமயத்தில் பழைய பாளைத்தில் வசித்து வந்தார். பாதிக்கப்பட்ட சண்முகத்தை ஆம்புலன்சில் ஏற்றி சோளிங்கர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள் அங்கு முதலுதவி சிகிச்சை பெற்றுக்கொண்டு மேல் சிகிச்சைக்காக வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றனர். அங்கு சிகிச்சை பலனின்று இறந்து விட்டதாக மருத்துவர் கூறினார். இது சம்பந்தமாக அசா.1 காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தார். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். இந்நீதிமன்றத்தில் காணொலி

காட்சி வாயிலாக ஆஜர் படுத்தப்பட்ட வடிவேல் தான் என்னுடைய மாமா சண்முகத்தை தாக்கிய நபர் ஆவார். நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் ரீப்பர் கட்டையால் தான் ஆஜர் எதிரியான வடிவேல் எனது மாமா சண்முகத்தை தாக்கினார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** இல்லை

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.08.28 15:38:27 +0545

II Additional District and Sessions Judge,
Arakkonam.